# News Release

# வாகனில் நகரச் சாலைகளில் தானியங்கி வேகக் கட்டுப்பாட்டுத் திட்டம் நிறுத்தம்

**வாகன், ஒன்ராறியோ (செப். 15, 2025)** – வாகன் நகரம் தனது தானியங்கி வேகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை உடனடியாக நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

செப்டம்பர் 15 அன்று நடைபெற்ற சிறப்புக் கவுன்சில் கூட்டத்தில், மேயர் ஸ்டீவன் டெல் டுகா முன்வைத்த தீர்மானத்தைக் கவுன்சில் அங்கீகரித்தது. இதன் மூலம், வாகன் நகரத்தின் இத்திட்டம் நிறுத்தப்பட்டு, போக்குவரத்து வேகத்தைக் கட்டுப்படுத்தும் பிற நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதோடு, சமூகப் பாதுகாப்பு மண்டலங்கள் – குறிப்பாகப் பள்ளி மண்டலங்களில் – வேகக் குறைப்புக்கான புதிய அணுகுமுறைகளை ஆராயத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிடத்தக்கது என்னவெனில், இந்த மாற்றம் தற்போது யார்க் பிராந்தியத்தில் (York Region) இயங்கும் வேகக் கேமராக்களுக்குப் பொருந்தாது. அவை இன்னும் பின்வரும் சாலைகளில் செயல்படுகின்றன:

- பத்திர்ஸ்ட் ஸ்ட்ரீட், நியூ வெஸ்ட்மின்ஸ்டர் டிரைவ்/ஆட்கின்சன் அவென்யூக்கு வடக்கில் (Bathurst Street, north of New Westminster Drive/Atkinson Avenue)
- இஸ்லிங்டன் அவென்யூ, ரூதர்ஃபோர்டு சாலைக்குத் தெற்கில் (Islington Avenue, south of Rutherford Road)
- கீல் ஸ்ட்ரீட், டினா சாலைக்கு வடக்கில் (Keele Street, north of Dina Road)
- மேஜர் மெகென்சி டிரைவ் வெஸ்ட், லாஃபோர்ட் சாலைக்கு மேற்கில் (Major Mackenzie Drive West, west of Lawford Road)
- ரூதர்ஃபோர்டு சாலை, இஸ்லிங்டன் அவென்யூக்குக் கிழக்கில் (Rutherford Road, east of Islington Avenue)
- வெஸ்டன் ரோடு, ஆஷ்பெர்ரி புல்வர்டுக்கு வடக்கில் Weston Road, north of Ashberry Boulevard
- யோங் ஸ்ட்ரீட், ஆர்னால்டு அவென்யூக்குத் தெற்கில் (Yonge Street, south of Arnold Avenue)

இன்று அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தின் ஒரு பகுதியாக, வாகனில் உள்ள பிராந்தியச் சாலைகளில் செயல்படுத்தப்படும் ASE திட்டத்தை இடைநிறுத்துமாறு யார்க் பிராந்தியத்திடம் கோரிக்கை வைக்கப்படும்.

மேலும், மேயரின் தீர்மானத்தில், போக்குவரத்து வேகக் கட்டுப்பாட்டை மேம்படுத்தும் கூடுதல் நடவடிக்கைகள் 2026 ஆம் ஆண்டுக்கான நகரின் பட்ஜெட் செயல்முறையில் பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

பாதுகாப்பான, பயனுள்ள மற்றும் நிலையான போக்குவரத்து அமைப்பை வழங்கும் குறிக்கோளுடன், MoveSmart Mobility Management Strategy மூலம் வாகன் நகரம் பல்வேறு சாலை பாதுகாப்புத் திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. இதில் அடங்கும் திட்டங்கள்:

- ஆக்டிவ் பள்ளி பயணம் (Active School Travel)
- சமூகப் பாதுகாப்பு மண்டலங்கள் மற்றும் பள்ளி மண்டலப் பாதுகாப்பு (Community Safety Zones and School Zone Safety)
- சாலை வழித்தட மதிப்பீடுகள் (Corridor Reviews)
- சுற்றுவட்டார பகுதிகளில் போக்குவரத்து வேகக் கட்டுப்பாட்டுத் திட்டம் (Neighbourhood Traffic Calming Plan)
- பள்ளி சாலை கடத்துநர் திட்டம் (School Crossing Guard program)
- வேக வரம்பு கொள்கை (Speed Limit Policy)
- #SlowDownVaughan

நகரின் ASE திட்டம் ஏப்ரல் 2025-ல் தொடங்கப்பட்டது. அதன் செயல்பாட்டை மதிப்பாய்வு செய்யும் வாய்ப்பை ஊழியர்களுக்கு வழங்கும் பொருட்டு, ஜூன் மாதத்தில் இத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது. ஜூன் 4, மாலை 5 மணிக்கு இடைநிறுத்தப்படுவதற்கு முன்னர் வேக மீறல்களுக்கு வழங்கப்பட்ட அபராத உத்தரவுகள் செல்லுபடி நிலையில் இருக்கும்; அவை குறிப்பிடப்பட்ட வழிமுறைகளின்படி செலுத்தப்பட வேண்டும் அல்லது மேல்முறையீடு செய்யப்பட வேண்டும். இந்த உத்தரவுகளுக்கு ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள அபராதங்களுக்குப் பணம் திருப்பி வழங்கப்படாது.

**மேற்கோள்**

ஒரு மேயராக, அனைத்து குடிமக்களின் பாதுகாப்பும் நல்வாழ்வும் தான் எனது முதன்மையான முன்னுரிமையாகும். கோடைக்காலத்தின் தொடக்கத்தில், நமது ஊழியர்கள் நகரின் தானியங்கி வேகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மதிப்பாய்வு செய்ய வாய்ப்பளிக்க, அதைத் தற்காலிகமாக நிறுத்தினோம். எளிதில் பாதிக்கப்படக்கூடிய சாலை பயணிகளின் பாதுகாப்பையும், நிதி அசாதாரணச் சூழலில் குடிமக்களுக்கு எந்தவொரு பொருளாதாரச் சுமையும் ஏற்படாத விதத்தையும் சமநிலை செய்ய முடியுமா என்பதைக் கண்டறிவதே இதன் நோக்கம். மதிப்பாய்வின் முடிவில், இந்தச் சமநிலையானது குடிமக்களுக்கு அபராத கட்டணம் விதிக்கப்பதில் மிகுந்த கவனம் செலுத்துவதாகத் தெளிவாகத் தெரிகிறது. இதனால், நான் இந்தத் திட்டத்தை நிறுத்தும் தீர்மானத்தை

முன்வைத்து, இன்று கவுன்சில் அதனை அங்கீகரித்தது. மேலும், யார்க் பிராந்தியத்திற்கு வாகன் நகரத்திலுள்ள பிராந்திய சாலைகளில் தங்களின் தானியங்கி வேகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை இடைக்காலமாக நிறுத்தப் பரிசீலிக்குமாறு கேட்கப்போகிறோம். பொறுப்பற்ற வாகன ஓட்டத்தை எதிர்த்து போராடவும், வேகத்தைக் குறைக்கவும், அனைத்து சாலை பயனர்களையும் பாதசாரிகளையும் பாதுகாக்கவும், நான் தொடர்ந்து கவுன்சில் மற்றும் ஊழியர்களுடன் இணைந்து பணியாற்றுவேன்.
- மேயர் ஸ்டீவன் டெல் டுகா

**முக்கியத் தகவல்கள்**

- செப்டம்பர் 15 அன்று நடைபெற்ற சிறப்பு முழுக் கூட்டத்தில், மேயர் ஸ்டீவன் டெல் டுகா நகரின் ASE திட்டத்தை உடனடியாக நிறுத்தும் தீர்மானத்தை முன்வைத்தார். இந்தத் தீர்மானம், செப்டம்பர் 15 அன்று நடைபெற்ற சிறப்புக் கவுன்சில் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
- நகரத்தின் ASE திட்டம் 2025 ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட்டது மற்றும் ஜூன் 4 அன்று மாலை 5 மணிக்கு இடைநிறுத்தப்பட்டது.
- ஜூன் 4, மாலை 5 மணிக்கு முன்னர் வேக மீறல்களுக்கு வழங்கப்பட்ட அபராத உத்தரவுகள் செல்லுபடி நிலையில் இருக்கும்; அவை குறிப்பிடப்பட்ட வழிமுறைகளின்படி செலுத்தப்பட வேண்டும் அல்லது மேல்முறையீடு செய்யப்பட வேண்டும். இந்த உத்தரவுகளுக்கு ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள அபராதங்களுக்குப் பணம் திருப்பி வழங்கப்படாது.
- வாகன் நகரம், MoveSmart Mobility Management Strategy (MoveSmart) வழியாக, வேகக் குறைப்பை உறுதி செய்யப் பல்வேறு சாலைப் பாதுகாப்புத் திட்டங்களில் தொடர்ந்து கவனம் செலுத்துகிறது. இது பாதுகாப்பான, பயனுள்ள மற்றும் நிலையான போக்குவரத்து அமைப்பை வழங்குவதற்கான நகரத்தின் தொலைநோக்குப் பார்வையை உருவாக்கி வழிநடத்த உதவுகிறது.
- யார்க் பிராந்தியம் வாகன் நகரின் சில பிராந்திய சாலைகளில் ASE திட்டத்தைச் செயல்படுத்துகிறது, மேலும் இந்தத் திட்டம் தற்போதும் நடைமுறையில் உள்ளது. நகரத்தில் இயங்கும் யார்க் பிராந்திய கேமராக்களின் முழுப் பட்டியல் அவர்களின் வலைப்பக்கத்தில் கிடைக்கிறது.

**மேலும் அறிய**

- MoveSmart Mobility Management Strategy வலைப்பக்கம்
- யார்க் பிராந்தியத்தின் தானியங்கி வேகக் கட்டுபாடு வலைப்பக்கம்

# News Release

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca